**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொள்ளாச்சி**
முன்னிலை : திரு.N.பாரதிராஜன், பி.ஏ., பி.எல்.,
**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி, பொள்ளாச்சி**

2025 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 26 ஆம் நாள் புதன்கிழமை
**இ.ம.எண்.02/2024 இன் அ.வ.எண்.95/2024**

P.K..சண்முகவேல் .... மனுதாரர்/வாதி

/ எதிர் /

P.பெரியசாமி .... எதிர்மனுதாரர்/பிரதிவாதி

இம்மனுவானது, கடந்த 17.02.2025 அன்று என் முன்பு இறுதி விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்/வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.P.பிரபாகரன் அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் A.ஏகமூர்த்தி அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வழக்கறிஞர்களின் வாதுரைகளை கேட்டும், இதுநாள் வரை எனது கவனமான பரிசீலனையில் இருந்து வரும் வழக்காவணங்களை பரிசீலித்தும், இந்நீதிமன்றம் இன்று வழங்கிடும் கீழ்க்கண்ட...

**ஆணையுரை**

மனு சொத்துக்களில் மனுதாரர் கொண்டுள்ள சுவாதீனத்திற்கு எதிர்மனுதாரரோ, அவரது ஆட்கள் வகையறாக்களோ எவ்வித இடையூறும் செய்யக்கூடாது என இவ்வழக்கு முடியும் வரை இடைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்கக் கோரி உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 39 விதி 1, 2 மற்றும் பிரிவு 151–ன் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2) மனு சங்கதியின் சுருக்கம் :**

மனுதாரர் அசல் வழக்கில் வாதியாவார். நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி மனுதாரரால் அசல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வழக்கு சொத்து ஒரு காளியப்பகவுண்டருக்கு பாத்தியப்பட்டது. காளியப்பகவுண்டர் அவரது மனைவியான மயிலாத்தாளையும், மகன்களான வாதியையும், ஒரு

பெரியசாமிக்கவுண்டரையும் விட்டு இறந்துவிட்டார். பிறகு மனுதாரரும், அவரது தாயாரான மயிலாத்தாளும் சகோதரரான பெரியசாமிக்கவுண்டரும் 1978 ஆம் ஆண்டு பதிவு செய்யப்பட்ட பாகப்படி சொத்துக்களை பாகம் பிரித்துக்கொண்டார்கள். அந்த பாகப்படி அதில் கண்ட ஏ அட்டவணை சொத்து பெரியசாமிக்கவுண்டருக்கும், பி அட்டவணை சொத்து மனுதாரருக்கும் ஒதுக்கப்பட்டது. பி அட்டவணை 1–வது அயிட்ட சொத்தானது மயிலாத்தாளுக்கு அனுபவிக்கும் உரிமை கொடுத்து அவரது ஆயுளுக்கு பிறகு மனுதாரருக்கு முழுமையாக சேரத்தக்கது என்று பாகம் செய்யப்பட்டது. மயிலாத்தாள் இறப்பிற்கு பிறகு பி அட்டவணை சொத்தானது மனுதாரருக்கு முழுமையாக பாத்தியப்பட்டது. அதுவே வழக்கு ஏ அட்டவணை சொத்தாகும். புல எண் 132/1–ல் செல்லும் வண்டிப்பாதையானது, மனுதாரர் மற்றும் அவரது சகோதரருக்கு மட்டும் பாத்தியப்பட்ட பொது வண்டிப்பாதையாகும். அதுவே வழக்கு பி அட்டவணை சொத்தாகும்.

**2.2)** மனுதாரருக்கு பாத்தியப்பட்ட சொத்தில் தெற்கு பகுதியில் எதிர்மனுதாரருக்கு பாத்தியப்பட்ட சொத்து உள்ளது. அவரது சொத்திற்கென்று தனியாக வண்டிப்பாதை உள்ளது. ஆனால், வழக்கு பி அட்டவணை வண்டிப்பாதையில் எதிர்மனுதாரர் நுழைந்து பயன்படுத்த முனைகிறார். வழக்கு வண்டிப்பாதைக்கு இணையாக அதன் தென்புறத்தில் கிழமேற்காக பி.ஏ.பி. வாய்க்கால் செல்கிறது. மேற்படி பி.ஏ.பி. கால்வாயின் தென்பகுதியில் மேற்கிலிருந்து கிழக்காக எதிர்மனுதாரரின் சொத்தை அடைய வண்டிப்பாதை உள்ளது. அவ்வாறு உள்ள வண்டிப்பாதையை பயன்படுத்தாமல், வழக்கு பி அட்டவணை வண்டிப்பாதையில் அத்துமீறி பிரவேசிக்க முயல்கிறார். அவ்வாறான எதிர்மனுதாரரின் செயலால் மனுதாரரின் வாழ்வாதாரம் பாதிக்கப்படுகிறது. மேலும், வழக்கு வண்டிப்பாதையை மனுதாரர் பயன்படுத்துவதற்கு எதிர்மனுதாரர் தடை ஏற்படுத்தியுள்ளார். எனவே, எதிர்மனுதாரருக்கு எதிராக நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி அசல்

வழக்கு தாக்கல் செய்யப்பட்டு இடைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**3)** <u>**எதிருரை சங்கதிகளின் சுருக்கம்.**</u>

மனு பொய்யானதும், மோசடியானதும், சட்டப்படியும், நியாயப்படியும் நிலைக்கத்தக்கதல்ல. எதிர்மனுதாரர்/பிரதிவாதி வெளிப்படையாக ஒப்புக்கொண்டுள்ள சங்கதிகளைத் தவிர மற்றவற்றை மனுதாரரே நிரூபிக்கவேண்டும். இறந்துபோன காளியப்பகவுண்டரின் மனைவி பெயர் மயிலாத்தாள் என்பது சரியல்ல, மலையாத்தாள் என்பதே சரியானது. மனுதாரருக்கும் அவரது சகோதரரின் வாரிசுகளுக்கும் இடையே, சொத்து குறித்து பிரச்சனை உள்ளது. வழக்கு பி அட்டவணை சொத்தான புல எண் 132/1–ல் அமைந்துள்ள வண்டித்தடமானது அரசுக்கு சொந்தமான இட்டேரி ஆகும். மேற்படி இட்டேரியானது எஸ்.பொன்னாபுரம் கிராமம் புல எண் 100–ல் தொடங்கி எதிர்மனுதாரர் பூமியான புல எண் 139–க்கு வடபுறம் 11.2 மீட்டர் அகலத்திலும், தென்புறம் 9.2 மீட்டராகவும் மேற்குபுறமாக சென்றடைகிறது. பாகப்பத்திரத்தில் பி அயிட்ட சொத்து விபரத்தில் பொது ஷராவில் ***"புல எண் 132/4 காலையில் தென்கோட்டில் 10 அடி அகலத்தில் புல எண் 132/1 வண்டிப்பாதையிலிருந்து புல எண் 133/1–ல் உள்ள 3 இலக்கமிட்ட பி.கே.சண்முகவேல்கவுண்டர் பங்கு பூமிக்கு போகவர வண்டி, கால்நடை, ஆட்கள், கோட்டேர் முதலியன செல்ல தடம் விட்டுவிடவேண்டியது"*** என கூறப்பட்டுள்ளது. எனவே, மனுதாரர் கூறும் வண்டித்தடமானது புல எண் 132/4–ல் அமைந்துள்ளது.

**3.2)** புல எண் 132/4–ல் உள்ள வண்டித்தடத்தை அவரது சகோதரரின் வாரிசுகளுடன் ஏற்பட்ட பிரச்சனை காரணமாக மனுதாரர் அனுபவிப்பதில்லை. புல எண் 132/1–ல் அரசுக்கு சொந்தமான இட்டேரி வண்டித்தடத்தை பயன்படுத்தி எதிர்மனுதாரர் புல எண் 139–ல் உள்ள தனது பூமியை அனுபவித்துவருகிறார். எதிர்மனுதாரர் மட்டுமின்று இட்டேரிக்கு இருபுறமும் உள்ள நில உடைமையாளர்கள் இட்டேரி வண்டித்தடத்தை காலம் காலமாக

பயன்படுத்திவருகிறார்கள். எதிர்மனுதாரருக்கு வேறு வண்டித்தடம் எதுவும் அவரது சொத்தை அடைவதற்கு இல்லை. எதிர்மனுதாரர், மனுதாரரை கடுஞ்சொற்களால் திட்டியதாக கூறுவது தவறு. மேலும், வண்டிப்பாதையை மனுதாரர் பயன்படுத்துவதை எதிர்மனுதாரத் தடைசெய்ததாக கூறுவது தவறாகும். எனவே மனு தள்ளுபடி செய்யப்படவேண்டும்.

**4)** இரு தரப்பும் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டன.

**5)** இம்மனுவில் தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சனை யாதெனில், இம்மனு அனுமதிக்கப்படவேண்டியதா இல்லையா என்பதாகும்.

**6)** **பிரச்சினை** :

மனு மற்றும் எதிருரையில் கண்டுள்ள சங்கதிகள், தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்கள் மற்றும் இருதரப்பில் எடுத்துரைக்கப்பட்ட வாய்மொழி வாதங்களை இந்நீதிமன்றம் தீர பரிசீலனை செய்தது. மனுதாரர்/வாதி தரப்பில் **ம.சா.ஆ.1** முதல் **ம.சா.ஆ.3** வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் **எ.ம.சா.ஆ.1** முதல் **எ.ம.சா.ஆ.2** வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன.

**7)** மனுதாரர் அசல் வழக்கில் வாதி ஆவார். வழக்கு சொத்துக்கள் காளியப்பகவுண்டருக்கு பாத்தியப்பட்டு, அவரது இறப்பிற்கு பின்பு அவரது வாரிசுகளான அவரது மனைவி மயிலாத்தாளும், வாதியும், வாதியின் சகோதரர் பெரியசாமிக்கவுண்டரும் பாகம் செய்துகொண்டதாகவும், அந்த பாகப்பத்திரத்தில் கண்ட பி அட்டவணை சொத்து மனுதாரரின் பாகத்திற்கு ஒதுக்கப்பட்டது என்றும், அதுவே வழக்கு ஏ அட்டவணை சொத்து என்றும், மனு பி அட்டவணை சொத்தானது, மனுதாரர் மற்றும் அவரது சகோதரரக்கு மட்டும் பாத்தியப்பட்ட வண்டித்தடம் என்றும், அதில் எவ்வித உரிமையும் இல்லாமல் எதிர்மனுதாரர் தடுத்து இடையூறு செய்துவருவதாக மனுதாரர் தரப்பில் கூறப்பட்டுள்ளது.

**7.2)** மா.சா.ஆ.1 பாகப்பிரிவினை பத்திரத்தை பரிசீலனை செய்கையில்

பொது ஷரா பகுதியில் புல எண் 134–ன் தென்கோட்டில் 10 அடி அகலத்தில் புல எண் 132/1 எண் காலை வண்டிப்பாதையிலிருந்து புல எண் 133/1–ல் உள்ள மனுதாரரின் பூமியை அடைவதற்கு பெரியசாமிக்கவுண்டர் தடம் விட்டுவிட வேண்டியது என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அதாவது, புல எண் 134–ல் 10 அடி அகலத்தில் வண்டித்தடத்திற்காக தடம் விட்டுவிடவேண்டியது என்று கூறப்பட்டுள்ளதே தவிர புல எண் 132/1–ல் உள்ள வண்டித்தடம் மனுதாரர் மற்றும் அவரது சகோதரர் பெரியசாமிக்கவுண்டருக்கு மட்டும் பாத்தியப்பட்டதாக எவ்வித சங்கதிகளும் காணப்படவில்லை.

**7.3)** புல எண் 132/1–ல் கண்ட சொத்தானது அரசு புறம்போக்கு இட்டேரி என்று எதிர்மனுதாரர் தரப்பில் எதிருரை தாக்கல் செய்யப்பட்டு, புல எண் 132/1–ற்கான புல வரைபடம் எ.ம.சா.ஆ.1 ஆகவும், 'அ' பதிவேடு எ.ம.சா.ஆ.2 ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளது. எ.ம.சா.ஆ.2 'அ' பதிவேட்டை பரிசீலனை செய்கையில் புல எண் 132/1 ஆனது புறம்போக்கு வண்டிப்பாதை என்று குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும், மேற்படி புல எண் 132/1–ல் கண்ட வண்டிப்பாதையானது குறிக்கப்பட்ட (Plan marked) நிலவியல் வண்டிப்பாதை என்பது எ.ம.சா.ஆ.1 புல வரைபடத்தை பரிசீலனை செய்கையில் தெரியவருகிறது. இந்நிலையில் வழக்கு பி அட்டவணை சொத்தான புல எண் 132/1–ல் செல்லும் வண்டிப்பாதை மனுதாரருக்கும், அவரது சகோதரருக்கு மட்டும் பாத்தியப்பட்ட வண்டிப்பாதை என்ற மனுதாரர் தரப்பு வழக்கு முதல் நோக்கில் நிரூபிக்கப்படவில்லை என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**முடிவாக,** மனு தள்ளுபடி செய்யப்பட்டு உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இவ்வாணையுரை, என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, பிழை நீக்கம் செய்யப்பட்டு 2025 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 26 ஆம் நாளான இன்று என்னால் அவையறிய பகரப்பட்டது.

**ஒப்பம்/– (N. பாரதிராஜன்)**
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
பொள்ளாச்சி.

**<u>மனுதாரர்கள் தரப்பு சாட்சி :</u>**

–இல்லை–

**<u>மனுதாரர்/வாதி தரப்பில் குறியீடு செய்யப்பட்டுள்ள சான்றாவணங்கள்</u> :**

| | | |
|---|---|---|
| ம.சா.ஆ.1 | 14.12.1978 | பாகப்பத்திரம் – சான்று நகல். |
| ம.சா.ஆ.2 | 08.04.2024 | பட்டா – கணினி நகல். |
| ம.சா.ஆ.3 | | பசலி 1432–ன் அடங்கல் – அசல் |

**<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி :</u>**

–இல்லை–

**<u>எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் குறியீடு செய்யப்பட்டுள்ள சான்றாவணங்கள் :</u>**

| | | |
|---|---|---|
| எ.ம.சா.ஆ.1 | 26.06.2024 | புல எண் 132/1–ஐ காண்பிக்கக்கூடிய புல வரைபடம் – ஆன்லைன் நகல் |
| எ.ம.சா.ஆ.2 | | எஸ்.பொன்னாபுரம் கிராம அ பதிவேடு |

**ஒப்பம்/– (N. பாரதிராஜன்)**
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
பொள்ளாச்சி.

---

**அசல் / வரைவு ஆணையுரை**
இ.ம. எண் 02/2024 இன் ஓ.எஸ்.95/2024
நாள் : 26.02.2025
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,
பொள்ளாச்சி.

---